No. of Printed Pages : **11**

**9047**

**M**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

# பொருளியல் / ECONOMICS

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

### பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

1. ‘புதிய பேரியல் பொருளியலின் தந்தை’-என அழைக்கப்படுபவர் யார் ?

(அ) ராக்னர் ஃபிர்ஸ்ச் (ஆ) ஆடம் ஸ்மித்

(இ) காரல் மார்க்ஸ் (ஈ) ஜே.எம். கீன்ஸ்

Who is regarded as the ‘Father of Modern Macro Economics’ ?

(a) Ragnar Frisch (b) Adam Smith

(c) Karl Marx (d) J.M. Keynes

2. கீழ்வருவனவற்றுள் தடைபடா ஓட்ட மாறியைக் கண்டுபிடி.

(அ) வருமானம்

(ஆ) பண அளிப்பு

(இ) வெளிநாட்டு செலாவணி இருப்பு

(ஈ) சொத்துக்கள்

Identify the flow variable.

(a) Income

(b) Money supply

(c) Foreign Exchange reserves

(d) Assets

3. NNP -ன் விரிவாக்கம் :

(அ) National Net Provident (ஆ) Net National Product

(இ) Net National Provident (ஈ) National Net Product

Expansion for NNP is :

(a) National Net Provident (b) Net National Product

(c) Net National Provident (d) National Net Product

4. MPC -ஐயும், MPS -ஐயும் கூட்டினால் கிடைப்பது __________.

(அ) 0.1 (ஆ) 1 (இ) 1.1 (ஈ) 2

The sum of MPC and MPS is __________.

(a) 0.1 (b) 1 (c) 1.1 (d) 2

5. __________ சமநிலையை கீன்சுடைய கோட்பாடு வலியுறுத்துகிறது.

(அ) மிக நீண்ட காலச் (ஆ) மிகக் குறுகிய காலச்

(இ) நீண்ட காலச் (ஈ) குறுகிய காலச்

Keynes theory emphasized on __________ equilibrium.

(a) Very long run (b) Very short run

(c) Long run (d) Short run

6. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையகம் அமைந்துள்ள இடம் :

(அ) மும்பை (ஆ) டில்லி (இ) பெங்களூரு (ஈ) சென்னை

The RBI Headquarters is located at _________.

(a) Mumbai (b) Delhi (c) Bengaluru (d) Chennai

7. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு புகழ்பெற்ற ஆண்டு :

(அ) 1911 (ஆ) 1908 (இ) 1914 (ஈ) 1910

Irving Fisher's Quantity Theory of Money was popularized in _________.

(a) 1911 (b) 1908 (c) 1914 (d) 1910

8. மைய வங்கி நாட்டின் _________ அதிகார அமைப்பு.

(அ) கூலி (ஆ) பணவியல்

(இ) தேசிய வருவாய் (ஈ) நிதியியல்

Central Bank is _________ authority of any country.

(a) Wage (b) Monetary

(c) National income (d) Fiscal

9. கடன் வாங்குபவர் தொடர்ந்து _________ நாட்களுக்கு வட்டியோ, கடன் தொகையின் அசல் பகுதியையோ செலுத்தாமல் இருந்தால் அதை செயல்படாத சொத்து என்கிறோம்.

(அ) 60 (ஆ) 30 (இ) 180 (ஈ) 90

Once the borrower fails to make Interest or Principal payments for _________ days the loan is considered to be a Non-Performing Asset.

(a) 60 (b) 30 (c) 180 (d) 90

10. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை :

(அ) மருந்து உற்பத்தி (ஆ) வங்கி

(இ) காப்பீடு (ஈ) அணு ஆற்றல்

In which sector Foreign Direct Investments is not permitted in India ?

(a) Pharmaceutical (b) Banking

(c) Insurance (d) Atomic Energy

**11.** இந்தியாவில் பொருளாதார சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்ட ஆண்டு :

(அ) 1993 (ஆ) 1991 (இ) 1994 (ஈ) 1992

In India, Economic policy reforms were started in the year :

(a) 1993 (b) 1991 (c) 1994 (d) 1992

**12.** சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர் __________.

(அ) பங்களவுகள்

(ஆ) தன் விருப்ப ஏற்றுமதி தடைகள்

(இ) தாள் தங்கம்

(ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

The other name for Special Drawing Rights is __________.

(a) Quotas

(b) Voluntary Export Restrictions

(c) Paper gold

(d) None of the above

**13.** உலக வங்கியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் :

(அ) வியன்னா (ஆ) வாஷிங்டன் டி.சி.

(இ) ஜெனிவா (ஈ) நியூயார்க்

World Bank is having its headquarters at :

(a) Vienna (b) Washington D.C

(c) Geneva (d) New York

**14.** GST __________ க்கு சமம்.

(அ) வருமான வரி (ஆ) விற்பனை வரி

(இ) உள்ளாட்சி வரி (ஈ) நிறுவன வரி

GST is equivalence of __________.

(a) Income tax (b) Sales tax

(c) Local tax (d) Corporate tax

**15.** நிதிக் கொள்கையின் நோக்கங்கள் __________.

(அ) விலை நிலைத்தன்மை (ஆ) பொருளாதார வளர்ச்சி

(இ) முழு வேலைவாய்ப்பு (ஈ) மேற்கண்ட அனைத்தும்

The objectives of Fiscal Policy is :

(a) Price stability (b) Economic growth

(c) Full employment (d) All of the above

**16.** அமில மழை __________ விளைவுகளில் ஒன்று.

(அ) நில மாசு (ஆ) காற்று மாசு

(இ) ஒலி மாசு (ஈ) நீர் மாசு

Acid rain is one of the consequences of __________.

(a) Land Pollution (b) Air Pollution

(c) Noise Pollution (d) Water Pollution

**17.** நீடித்த வளர்ச்சி (அல்லது) வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் __________.

(அ) 2040 (ஆ) 2030 (இ) 2050 (ஈ) 2035

Sustainable Development Goals and targets are to be achieved by __________.

(a) 2040 (b) 2030 (c) 2050 (d) 2035

**18.** கீழ்கண்டவற்றுள் சுட்டிகாட்டும் திட்டமிடலைச் செயல்படுத்திய நாடு __________.

(அ) இத்தாலி (ஆ) பிரான்ஸ் (இ) இரஷ்யா (ஈ) ஜெர்மனி

Which of the following country adopt Indicative Planning ?

(a) Italy (b) France (c) Russia (d) Germany

**19.** நிதி ஆயோக்கின் தலைவர் __________.

(அ) உதவி குடியரசுத் தலைவர் (ஆ) பிரதமர்

(இ) நிதி அமைச்சர் (ஈ) குடியரசுத் தலைவர்

The Chairperson of NITI Aayog is __________.

(a) Vice-President (b) Prime Minister

(c) Finance Minister (d) President

**20.** ஒட்டுறவு எனும் கருத்தினை முதலில் பயன்படுத்தியவர் :

(அ) ஸ்பியர்மேன் (ஆ) நியூட்டன் (இ) கால்டன் (ஈ) பியர்சன்

The term regression was first used by :

(a) Spearman (b) Newton (c) Galton (d) Pearson

## பகுதி - II / PART - II

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

**21.** முதலாளித்துவம் என்றால் என்ன ?

What do you mean by Capitalism ?

**22.** GDP குறைப்பான் இலக்கணம் தருக.

Define GDP deflator.

**23.** புள்ளியியலின் வகைகள் யாவை ?

What are the types of Statistics ?

**24.** முழு வேலைவாய்ப்பு – வரையறுக்கவும்.

Define Full employment.

**25.** நுகர்வு சார்பு என்றால் என்ன ?

What is Consumption Function ?

**26.** தன்னிச்சை முதலீடு என்றால் என்ன ?

What is Autonomous Investment ?

**27.** தேக்கவீக்கம் என்றால் என்ன ?

What is Stagflation ?

**28.** வணிக வங்கிகள் பற்றி எழுதுக.

Write about Commercial Banks.

**29.** பன்னாட்டு வாணிகம் என்றால் என்ன ?

What is meant by International Trade ?

**30.** WTO -வின் பணிகள் ஏதாவது இரண்டினை குறிப்பிடுக.

Write any two functions of WTO.

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** சமதரும குறைகளை கூறுக.

Indicate the demerits of Socialism.

**32.** செலவு முறை பற்றி சிறு குறிப்பு வரைக.

Give a short note on Expenditure method.

**33.** தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.

Explain about Aggregate Supply with the help of diagram.

**34.** மிகை பெருக்கி பற்றி எழுதுக.

Write about Super Multiplier.

**35.** பண அளிப்பு என்றால் என்ன ?

What is Money Supply ?

**36.** நபார்டின் (NABARD) பணிகள் யாவை ?

What are the functions of NABARD ?

**37.** வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.

State any three characteristics of Tax.

**38.** ‘உவர் நிலம்’ பற்றி சிறு குறிப்பு வரைக.

Write a short note on ‘Alkali soil’.

**39.** புள்ளியியலின் பணிகள் யாவை ?

What are the functions of Statistics ?

**40.** வழிகாட்டும் திட்டமிடல் என்றால் என்ன ?

What is meant by Planning by Direction ?

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பொருளாதார முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்.

(a) Describe the scope of Macro Economics.

**OR**

(b) Discuss the economic determinants of economic development.

**42.** (அ) நாட்டு வருமானத்தை கணக்கிடும் பல்வேறு முறைகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) நிதிக் கொள்கையின் கருவிகள் எவை ? விளக்குக.

(a) Describe the various methods of estimating National Income of a country.

**OR**

(b) State and explain instruments of Fiscal Policy.

**43.** (அ) பெருக்கி இயங்கும் விதத்தினை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்கவும்.

(a) Illustrate the working of Multiplier.

**OR**

(b) Describe the different phases of Trade Cycle.

**44.** (அ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.

**அல்லது**

(ஆ) உள்நாட்டு வாணிகத்திற்கும், பன்னாட்டு வாணிகத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை விவரிக்கவும்.

(a) Explain the role of Commercial Banks in economic development.

**OR**

(b) Discuss the differences between Internal Trade and International Trade.

**45.** (அ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.

**அல்லது**

(ஆ) புள்ளியியலின் இயல்புகள் மற்றும் எல்லைகளை விளக்குக.

(a) Bring out the functions of World Bank.

**OR**

(b) Elucidate the nature and scope of Statistics.

**46.** (அ) பொது நிதியின் எல்லைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) ADF, ASF -க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரிக்கவும்.

(a) Explain the scope of Public Finance.

**OR**

(b) Narrate the equilibrium between ADF and ASF with diagram.

**47.** (அ) பின்வரும் விவரங்களுக்கு உண்மை சராசரியைப் பயன்படுத்தும் வாய்ப்பாட்டை பயன்படுத்தி கார்ல் பியர்சனின் உடன் தொடர்பு கெழுவினை கண்டறிக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| காரின் வயது (ஆண்டுகளில்) (X) | 3 | 6 | 8 | 9 | 10 | 6 |
| பராமரிப்பு செலவு (₹ 000 -களில்) | 1 | 7 | 4 | 6 | 8 | 4 |

**அல்லது**

(ஆ) ஆசியானின் நோக்கங்களை விளக்குக.

(a) Estimate the Karl Pearson's co-efficient of correlation with actual mean method for the following data.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Age of cars in years (X) | 3 | 6 | 8 | 9 | 10 | 6 |
| Cost of Annual Maintenance (in 000 ₹) | 1 | 7 | 4 | 6 | 8 | 4 |

**OR**

(b) Explain the objectives of ASEAN.

**- o O o -**